RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s522

OPEN ACCESS

# திராவிடக் கருத்தியலின் முதல் முன்னோடி க. அயோத்திதாசப் பண்டிதர்

**ஆ. முனியாண்டி** [அ, *]

[அ] மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# C. Iyothee Thassa Pandithar, The First Pioneer of Dravidian Ideology

**A. Muniyandi** [a, *]

[a] Madurai Kamaraj University, Madurai- 625021, Tamil Nadu, India

* Corresponding Author: lotusthulasitamil@gmail.com

Received: 01-08-2021
Revised: 03-06-2022
Accepted: 26-06-2022
Published: 25-08-2022

**ABSTRACT**

The time of revival of the Hindus and the conversion of all the people into Hinduism through organizations such as the Brahma Samaj and the Arya Samaj took place in the latter half of the 19th century. Iyothee, one of the great thinkers of modern India, renounced Hinduism when he examined his society and the reasons for experiencing his social and caste oppression. In this study, the researcher has explained in detail and clearly, with sufficient supporting evidence, the quest for the education of Iyothee, the anti-Hindu religious sentiments of Iyothee, the Dravida Mahajana Sabha and the 10 demands, the village school, and the right to proportion, the reasons for the decline of the Paraiyars, the need for social change, the disguised brahmins, and the Dalits and the toil, and the role played by Iyothee in his society and caste oppression.

**Keywords:** Dravidian Ideology, Social Change, Iyothee Thass Pandithar, Dalit

## முன்னுரை

நவீன இந்தியாவின் மாபெரும் சிந்தனையாளர்களில் ஒருவர்தான் க. அயோத்திதாசப் பண்டிதர். தென்னிந்திய சமூகப் புரட்சியின் தந்தையும் இவரே (Angayarkanni & Kiruthiga, 2020). அயோத்திதாசப் பண்டிதர் ஓர் சிறந்த செயற்பாட்டாளராகவும், சிறந்த தழிழறிஞராகவும் விளங்கியவர். வுரலாற்று நுட்ப அறிவும், சித்த மருத்துவப் புலமையும், அரசியல் செயல்பாடும் கொண்டவர் (Angayarkanni & Kiruthiga, 2021). சாதி ஒழிப்பு, சமூக நீதி, பகுத்தறிவு அம்சங்களில் பாபாசாகேப் அம்பேத்கார் மற்றும் பெரியர் போன்ற திராவிடக் கருத்தியலாளர்களில் முதல் முன்னோடியாக விளங்கியவர் க. அயோத்திதாசப் பண்டிதர் ஆவார்.

## அயோத்திதாசரின் கல்வி தேடல்

இந்து சாதியை புரிந்து கொள்ளும் ஒவ்வொருவருக்கும் அதன் கொடூரம் நன்கு புலப்படும். அயோத்திதாசர் தன் சமூகம் சாதிய வன்கொடுமையை அனுபவிப்பதற்கு அதற்கு உண்டான காரணங்களை ஆராய்ந்த போது இந்து சமயத்தையே உதறித் தள்ளி விடுகிறார். அயோத்திதாசப் பண்டிதர் இளமையிலேயே கற்கும் ஆர்வத்தினைக் கொண்டு அயோத்திதாச கவிராஜ பண்டிதரிடம் கல்வி கற்றார்.

“மானுடத்தில் ஒடுக்கப்பட்ட என்று

சொல்லப்படுகின்ற பூர்வக்குடி தலித்

மக்கள் கல்வி கற்றால்

காதில் ஈயத்தைக் காய்ச்சி

ஊற்ற வேண்டும்"

என்ற பிராமணன் மனுவின் அதர்மத்தை வெறுத்தார் (Raj Gowthaman, 2006). பின் கல்வியை நன்முறையில் கற்று அதன் மூலம் அறியாமை எனும் இருளை உடைத் தெரிகிறார் அயோத்திதாசப் பண்டிதர். மேல்சாதி மக்களின் ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர்வினையை பூர்வக்குடி மக்களாகிய நாங்கள் தருவோம் என்று அயோத்திதாசர் படித்து எதிர்வினையாற்றினார்.

## அயோத்திதாசரின் இந்து சமய எதிர்ப்பு

அயோத்திதாசரின் காலம் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர். அப்போது தான் இந்துக்கள் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட காலமும் ஆகும். பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் போன்ற அமைப்புகள் மூலம் அனைத்து மக்களையும் இந்துவிற்குள் திணித்த காலமும் இக்காலத்தில் தான்.

"பெருவாரியான மக்கள் கிருத்தவம் இஸ்லாம், சீக்கியர் என்று மாறவே இத்தருணத்தின் வெள்ளை அதிகாரிகளுக்கு அணுக்கமாக இருந்த உயர்சாதியினர் மேற்கூறிய பெருந்திரளான மக்களை இந்துக்கள் என்று அடையாளப்படுத்தும்படி ஆலோசனை வழங்கினார்கள் அதன் படியே வெள்ளை அதிகாரிகளும் இம்மக்களை இந்துக்கள் என்று குறிப்பிடும்படி கணக்கெடுப்பாளர்களுக்கு அறிவுறுத்தினர்" (Dharmaraj, 2003).

உலகில் யாரெல்லாம் கிறித்தவர்கள், இசுலாமியர்கள் இல்லையோ அவர்களை எல்லாம் இந்துக்கள் என 1861 முதல் 1891 வரை மக்கள்தொகை கணக்கெடுப்பில் 'இந்து' என்ற அடையாளத்திற்குள் கட்டாயப்படுத்தி திணிக்கப்பட்டார்கள். அயோத்திதாசர் இந்து என்ற சொல்லை ஏற்க மறுத்தவர். அவ்வாறு இந்து என்னும் அடையாளத்தை ஏற்றுக் கொண்டால் 'இந்து சமூகத்தின் சாதிய அமைப்பை' ஏற்றுக் கொள்ள வேண்டும் சாதியக் கொடுமையை மிக அதிகமாக அனுபவிக்கும் தலித்'மக்கள் 'இந்து' அடையாளத்தை ஏற்கக் கூடாது என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார் அயோத்திதாசப் பண்டிதர்.

## திராவிட மகாஜனசபையும் 10 கோரிக்கைகளும்

அயோத்திதாசப் பண்டிதரால் துவக்கப்பட்ட சாதியற்ற திராவிட மகாஜன சபையின் சார்பாக 1891 டிசம்பர் 1-ம் நாள் இந்திய தேசிய காங்கிரஸிர்க்கு 10 கோரிக்கைகளை முன் வைத்தார். அவையாவன,

1. இக்கூட்டத்தோரை பறையர் என்று கூறுவதற்கு யாதோர் ஆதரவும் கிடையாது. ஆதலின் பறையன் என்று இழிவுபடக் கூறுவோரை பழித்தல் அவதூரென்றும் குற்றத்திற்கு ஆளாகும் ஓர் சட்டம் ஏற்படுத்த வேண்டும்.
2. இக்குலத்து ஏழைக்குடி மக்கள் விருத்தியடையும்படி கல்வி சாலைகள் அமைத்து தருதல் வேண்டும்.
3. இக்குலத்துப் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை கொடுக்க வேண்டும்.
4. கல்வியில் தேறியவர்களுக்கு கவர்மெண்ட் உத்தியோகம் வழங்க வேண்டும்.
5. அவர்களின் கல்வி, நல்லொழுக்கத்திற்கு ஏற்ப உத்தியோகம் வேண்டும்.
6. கிராமங்களில் உள்ள பதவிகள் இவர்களுக்கு அளிக்க வேண்டும்.
7. பறையர்களை 464-வது சட்டத்தின் படி சகல வேலைகளும் கொடுக்கலாம் என்ற சட்டத்தை மாற்ற வேண்டும்.
8. பொதுவான குளம், கிணறுகளில் இக்குலத்தோர் யாவரும் தடையின்றி நீர் எடுக்கலாம் என்ற மாற்றம் வேண்டும்.
9. ஆங்கிலேயர், இந்துக்கள் வேலை செய்யும் ஆபீசுகளுக்கு இவர்கள் வரக் கூடாது என்ற எண்ணத்தை மாற்ற வேண்டும்.

10. இக் குலத்தோரின் குறைகளை கலெக்டர் துரையவர்கள் விசாரித்து நீதி வழங்க வேண்டும்."

என்னும் பத்து கோரிக்கைகளை தீர்மானங்களாக நிறைவேற்ற, காங்கிரஸ் செயலாளர் திரு. வீரராகவச்சாரியருக்கு அனுப்பினார். அவரும் கூட்டத்தில் விவாதித்து பதில் சொல்வதாக அயோத்திதாசப் பண்டிதருக்கு கடிதம் எழுதினார். பின்பு பதில் ஏதும் வரவில்லை. அயோத்திதாசர் தனது இதழான 'ஒரு பைசா தமிழன்' என்னும் இதழில் இது குறித்து வெளியிட்டார் (Manokari, 2005).

## கிராமப் பள்ளியும் விகிதாச்சார உரிமையும்

"கோவில் என்பது அனைவருக்கும் பொதுவானது என்று கூறுகிறார்கள். ஆனால் இவர்களை மட்டும் விஷ்ணுவின் கோவில் உள்ளும், சைவ மதத்தின் சிவன் கோயில் உள்ளேயும் அனுமதிக்காதது நினைத்து வருத்தம் தெரிவித்தார். அப்போது தஞ்சாவூர் பிரதிநிதி ம.அ.அ. ஸ்ரீ 'சிவராமசாஸ்திரியார்' அவர்கள் உங்களுக்குத்தான் மதுரை வீரசாமி, காட்டேரிசாமி, கருப்பணசாமி இருக்கிறதே அதனை வணங்குங்கள் என்கிறார்" (Manokari, 2005).

சாஸ்திரி அவர்கள் அவ்வாறு கூறியதும், அயோத்திதாசர் ஐயா உங்கள் சாமிகள் எங்களுக்கு வேண்டாம். இருப்பினும் இக்குலத்து சிறுவர்களுக்கு கிராமங்கள் தோறும் கல்விச்சாலைகள் வைத்து நான்காவது வரை இலவச படிப்பு கற்பதற்கு பள்ளிக்கூடம் கட்டித் தருமாறு கேட்டுக் கொண்டார். இதன் மூலமே இன்று வரை கிராமங்கள் எங்கும் பள்ளிகள் அமைக்கப்பட்டன. அதற்கு அயோத்திதாசப் பண்டிதரின் பெரும் முயற்சியே என்பது திண்ணம். மேலும்,

"அரசு அலுவலகங்களில்

இக்குலத்தோருக்கு

பணி நியமனம்

அதாவது

தாழ்த்தப்பட்டோருக்கு

இட ஒதுக்கீடு."

என்னும் அயோத்திதாசரின் கோரிக்கைகள் விகிதாச்சார (இடஒதுக்கீட்டு) உரிமையை பெற வழி வகுத்தவர் இவரே ஆவார் (Manokari, 2005).

## பறையர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

பறையர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டறிய விரும்பினார் அயோத்திதாசர். ஆசையே துன்பத்திற்குக் காரணம் எனப் புத்தர் பெருமான் கண்டறிந்தார். அது போல் பறையர்களின் துன்பத்திற்கு தாங்கள் முன்னேற வேண்டும் என்னும் ஆசையின்மையே காரணம் என்பதை அயோத்திதாசப் பண்டிதர் கண்டறிந்தார். பறையர்களின் பிறப்போடு சேர்ந்து சாதியும், தீண்டாமையும் பிறக்கிறது. இதனாலேயே தான் அவர்களுக்கு கணக்கில் அடங்கா துன்பங்கள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிந்த அயோத்திதாசப் பண்டிதர் பறையர்களின் துயர் துடைக்கப் பல வழிமுறைகளையும் கண்டறிந்தார். அவை

"தன்னை உணர்தல்

தன்னைப் பற்றியே பேசுதல்

தான் முன்னேறச் சிந்தித்தல்

திரும்பத் திரும்ப அதையே சிந்தித்தல்

அதற்கான வழிகளைக் காணுதல்,

அவற்றைச் செயற்படுத்துதல்"

போன்ற வழிமுறைகளை மக்களிடம் எடுத்துரைத்தார் அயோத்திதாசப் பண்டிதர் (Subasu, 2005).

## சேரியும் குப்பமும்

ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி சென்னையில் வேரூன்றத் தொடங்கிய அக்காலக்கட்டத்தில் 1802-ம் ஆண்டு சென்னையின் உட்பகுதிகளில் பறையர்கள் வாழ்ந்த பகுதிகள் 'சேரிகள்' என்றும் மீனவர்கள் வாழ்ந்த கடலோரப் பகுதிகள் 'குப்பம்' என்றும் அழைக்கப்பட்டது.

"சேரி என்ற சொல் சென்னையில் தலித்துக்கள் வாழ்ந்த பகுதி என்பதை உறுதிபடுத்திக் கொள்ள முடிகிறது. இச்சேரிகள் செம்மண் சேரி, ஆல் தோட்டம், எழும்பூர், தேனாம்பேட்டை, வியாசர்பாடி, கொய்யாத் தோப்பு" முதலியன என்று கூறுகின்றார் (Thangavelu, 1993).

## புத்தரின் பெயர்களே

அழகர்மலை என்று இப்போது கூறப்படுகிற திருமாலிருஞ்சோலை மலையில் இருங்குன்றம் என்ற இடத்தில் இவர்களுக்குக் கோயில் இருந்திருக்கிறது. பல தேவர் கோயிலை புகர் வெள்ளை, நாகர் தம் கோட்டம் என்று சிலம்பு கூறுகிறது.

"தமிழரின் திருமாலோடு (மாயோன்) ஆரியரின் விஷ்ணு (உபேந்திரன்) பிற்காலத்தில் இணைக்கப்பட்டது. அதனைப் போல பலதேவரும் திருமாலோடு இணைக்கப்பட்டது. பல தேவர் வழிபாடுகைவிடப்பட்டு கண்ணன் (வாசு தேவர்) வழிபாடு மட்டும் நிலைத்து விட்டது." இவ்வாறு கூறிய சிவன், திருமால், முருகன் முதலியவை புத்தரின் பெயர்களே ஆகும். புத்த மதம் தமிழகத்தில் அழிந்த பிறகு சைவரும் வைணவரும் தங்களது தெய்வங்களாக மாற்றிக் கொண்டனர் (Vengadasamy Mayilai, 1962).

## மூடப்பழக்கமும் முட்டாள் தனமும்

திருமணம் முடிந்து பல வருடங்களால் குழந்தை இல்லாதவர்கள் குழந்தை பெற்றெடுக்க மூடப்பழக்கத்தால் கோயிலைச் சுற்றி மரத்தில் தொட்டில் கட்டி விட்டு, குழந்தை பிறந்தால் எடைக்கு எடை பணத்தை காணிக்கையாக உண்டியலில் போடுகிறேன் என்று கணவனும் மனைவியும் பிரார்த்தனை செய்யும் பழக்கத்தை இன்றும் நாம் காண முடிகின்றது. ஒரு சிலர் சிலைக்கு எதிரில் இரு கை கூப்பி வணங்குவது, கன்னத்தில் தட்டிக் கொள்வதும், கை விரல்களை மூடிக் கொண்டு தலையில் கொட்டிக் கொள்வதும், தோப்புக்கரணம் போடுவதும் அப்படி வேண்டிக் கொண்டால் தான் நினைத்த காரியம் எல்லாம் வெற்றியாகுமாம் என்று தினம் சேஷ்டைகள் செய்து விட்டு வேலைக்குச் செல்கிறார்கள். முன்னோர்களைப் போலவே மூடநம்பிக்கையில் முட்டாள்களாய் வாழாதே, இல்லாத கடவுளை இருக்கு என்று நம்பாதே,

"மதப்போறை மற

கடவுள் போரை மற

சாதிப் போரை மற

கடவுளை மற

மனிதனை நினை" (Kanniappan, 2013).

## சிவராத்திரி

பிரம்மா, விஷ்ணுக்கள் பொருட்டுச் சிவமூர்த்தி லிங்கமாக எழுந்து அருளிய போது தேவர்கள் பூசித்த காலம் என்றும்,"ஒரு பிரம கற்பத்தில் சத்தி நாற் சாமத்திலும் சிவபூசை செய்து தாம் பூசித்த

காலம்."சிவராத்தியாகம்" என சிவமூர்த்தியை வரம் வேண்டி பெற்ற நாளென்றும், சத்தி விளையாட்டாகச் சிவமூர்த்தியின் திரிநேதத்திரங்களை மூட உலகங்கள் இருண்டன என்றும், அக்காலத்துச் சிவமூர்த்தியைத் தேவர் வணங்கின காலம் என்றும்,பாற்கடலில் தோன்றிய விடமுண்ட சிவமூர்த்தியை விடம் பிடிக்காமல் தேவர் இரா (இரவு) முழுவதும் பூசித்த காலம் என்றும்" ஒரு கற்பத்தில் அண்டங்கள் எல்லாம், இருள உருத்திரர் அந்த இருள் நீங்கச் சிவத்தைப் பூசித்த காலம் எனவம் பல புராணங்கள் கூறுகிறது (Narayanasamy, 2006). சிவராத்திரியை யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி என்று ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் கால வரையறையும் கொடுக்கப்பட்டு சிவராத்திரி தோன்றக் காரணம் என்று கதைகளையும் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர் என்று அயோத்தி தாசப் பண்டிதர் கூறுகிறார்.

## சொர்க்கபூமி

புத்தசமயம் அழிக்கப்படாமல் இருந்திருக்குமேயானால் இந்திய நாடு ஆனந்தம் தவழும் சொர்க்க பூமியாக உலகத்துக்கே ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்திருக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை என்பதை,

"சாதி ஏற்றத் தாழ்வுகள்

தீண்டாமை, பெண் அடிமை

வறுமை, கொலை, கொள்ளை

பொய் வஞ்சம் முதலான

கொடிய தன்மைகள்

மக்களிடம் இருந்திருக்காது."

இவ்வாறான ஏற்றத்தாழ்வும் இல்லாமல் மக்கள் அனைவரும் சமத்துவ நிலையில் இருந்திருப்பார்கள் என்று கூறியுள்ளார் (Ayothithasar, 1999).

## திருநீறு

விபூதியையும் திருநீற்றையும் அணிந்து தங்களது அறிவினை குறைத்துவிட்டனர். இத்தகைய மூடநம்பிக்கைகளை ஒழித்துவிட்டு அனைவரும் சமமாக வாழ வேண்டும். சாம்பலின் மூலம் வரும் திருநீறுக்கு பூதி, மாபூதி நீறு, நீரற்ற என்னும் பலப் பெயர்கள் உண்டு என்றும், சிவன் உலக மக்களைக் காப்பாற்றுவதற்கு சாம்பல் அல்லது திருநீற்றை அணிவதாக கூறுவர்.

"பிள்ளைகள் நோயால் வருந்தாது

மருந்துண்டு தாய்மார் காப்பது போல,

காக்கும் தொழிலையுடைய சிவபிரான்

உயிர்களுக்குத் துன்பத்தை நீக்க

சுடுகாட்டு வெண்ணீற்றை அணிகின்றாராம்"

என்னும் கூற்றை கூறுகின்றார் (Ayothithasar, 1999).

## சமுதாய மாற்றம் வேண்டும்

அரிச்சந்திரன் கதை பௌத்தர்களைப் பாழ்படுத்தி வேஷப் பிராமணத்தை விருத்தி செய்வதற்கென்றே புனையப்பட்ட கதை ஆகும். உலகில் யாராவது இவ்வரிச்சந்திரபுராணம் பொய் இல்லை, உண்மை என்று கூறுவராயின் அதில் உள்ள பொய்களை விளக்கிக் காட்டுவோம். சிற்றூர்கள்,

நகரங்கள் போன்ற இடங்களில் நாடகமாக, தெருக்கூத்தாக, வில்லுப்பாட்டாக, அரிச்சந்திரன் கதைதான் நடத்தப்பட்டு வந்தன. ஒவ்வொரு ஊரிலும் சுடுகாட்டு எல்லைக்கு நுழைவு வாயில் கல், சிலை ஒன்றை நாட்டி, அது அரிசந்திரன் கல் எனப் பெயரிட்டு அங்கே பிணங்களை பாடையுடன் இறக்கி வைத்து சுற்றி வந்து வழிபாடு செய்வதோடு,

"முந்திப் பிறந்தவன் நான்!

முதுகில் புரிநூல் தரித்தவன் நான்

சங்கப் பறையன் நான்

சாதிக்கெல்லாம் பெரியவன் நான்

காளியம்மா கதவைத் திற

அரிச்சந்திரன் வழிவிடு"

என்று ஓங்கிய குரலில் கூறிவிட்டு பிணத்தை எடுத்துக்கொண்டு போய் புதைத்தோ, எரித்தோ செய்துவந்தனர் (Prabagaran, 2005). எல்லா சாதிப்பிணங்களுக்கும் இதே வசனம்தான் கூறிவந்தனர். இவ்வசனத்தை சொல்லி முழங்கும் தாழ்த்தப்பட்ட மனிதனை மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக இன்றுவரை ஒதுக்கியே வருகின்றனர். உண்மையான மனிதப் பண்பு மலர்வதற்கும், சமுதாய மாற்றம் நடப்பதற்கும் புராணங்களில் புதைந்துள்ள புனைவுகளை நீக்குவதுதான் ஒரே வழி என்று அயோத்திதாசப் பண்டிதர் கண்டறிந்துள்ளார்.

## அயோத்திதாசர் கூறும் வேஷப் பிராமணர்கள்

பழங்காலத்தில் வாழ்ந்த மக்களை எவ்வாறு வகைப்படுத்தி கூறியுள்ளனர் என்பதை சாந்த குணம் நிறைந்தவர்கள் பிராமணர் என்றும், பல வீரசெயல்களைச் செய்பவர்கள் சத்திரியர் என்றும், ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறும் பண்டமாற்று முறை செய்பவர்கள் வைசியர் என்றும், பூமியில் பிறந்து பலவகைத் தொழில்கள் செய்பவர்களை சூத்திரர் என்றும் அவரவர் செய்யும் தொழில்முறைக்கு ஏற்றவாறு பெயர்கள் வைக்கப்பட்டது என்பர். இந்தப் பிறப்பு நிலையை அப்படியே அடியோடு வேஷப்பிராமணர்கள் மாற்றிவிட்டார்கள்.

"பிராமணன் என்பவனுக்கு இராமசாமி என்று பெயர் வைத்திருந்தால் அவனை மற்றவர்களை அறிந்து கொள்வதற்கு வசமாக இராமசாமி சர்மா என்றும், ஒரு சத்திரியனுக்கு முத்துச்சாமி என்று பெயர் இருப்பின் அவனை மற்றவர்களிடம் இருந்து வேறுபாடு காட்டுவதற்கு முத்துச்சாமி வர்மா என்றும், ஒரு வைசியனுக்கு பொன்னுசாமி என்று பெயர் இருந்தால் அவனை பிறர் அறிந்து கொள்வதற்கு எளிய முறையாக பொன்னுசாமி பூதி என்றும்" சாதிகள் நான்கு என்று குறிப்பிட்டு இருந்தார்கள். மேலே மூன்று சாதிகளுக்கு மட்டும் பிறப்பிற்கேற்ப பெயர் வைக்கும் முறையினை கூறியவர்கள். சூத்திரருக்கு மட்டும் பெயர் முறையினைக் கூறாமல் விட்டுவிட்டார்கள் (Ayothithasar, 1999).

## மூவேந்தர்களும் சிறப்புப் பெயர்களும்

மூன்று ஜாதிகளோடு அவர்கள் பெயரை சேர்த்துக் கொண்டது போன்று மூவேந்தர்களும் தங்களது பெயருடன் சிறப்புப் பெயரையும் சேர்த்துக்கொண்டனர் என்பதை

"சேரன், சோழன், பாண்டியன்

மூவேந்தர்களும் தங்களது பெயர்க்கும்

பின்னால் அவர்களுக்குரிய சொற்களை

பயன்படுத்தினார்கள் சேரன் - வானவர்

வில்லவர், குடவர், குட்டுவர், பொறையர்,

மலையர் என்ற பெயர்களாலும்

சோழன் - சென்னி, செம்பியன், வளவன்

கிள்ளி என்ற பெயர்களாலும்

பாண்டியன் - மீனவர், கவரியர், பஞ்சவர்

தென்னவர், செழியர், மாறர், வழுதி

என்ற பெயர்களாலும்"

என்பதையும் சுட்டிக்காட்டி பிராமணன் பெயரோடு 'சர்மா' என்ற பெயரை சேர்த்து 'சங்கர்தயால் சர்மா' என்றும் சத்தியரின் பெயருடன் வர்மா என்ற சொல்லை இணைத்துக்கொண்டு மூன்றாம் 'நந்திவர்மன்' என்றும் பெயருடன் இணைந்திருப்பதை நாம் இதன் மூலம் அறியமுடிகின்றது (Dhatchanamoorthi, 2005).

## தலித் மக்களும் உழைப்பும்

அயோத்திதாசப் பண்டிதர் காலத்தில் கிராமங்களில் வாழ்ந்த தலித் மக்களின் உணவு, உடை இருப்பிடத்திற்கு அக்கிராமத்தில் உள்ள நிலவுடைமைச் சாதிகளையே சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்தில் தலித் மக்கள் இருந்திருக்கின்றனர். தலித் மக்களின் உடல் உழைப்பானது சாதியின் பெயரால் நிலவுடைமைச் சாதியினரால் சுரண்டப்பட்டது. இதனை அறிந்த அயோத்திதாசப் பண்டிதர் நிலத்தை உழுது பயிரிட்டு விளைச்சலைத் தருகின்ற தலித் மக்களிடம் நிலம் இல்லாமையே இதற்கு முழுமுதற் காரணம் என்பதை உணர்ந்தார்.

"அமெரிக்கா தேசத்து குடிகளுள்

சொந்த பூமியை வைத்துக்கொண்டு

வேளாளர்களாய் இருப்பவர்கள்

நூற்றுக்கு 87 பெயர்கள்

இருக்கிறார்கள். நமது தேசத்திலோ

சொந்த பூமியில் பயிரிடும்

தொழிலாளர்களும் வேளாளரை

நூற்றுக்கு 5 பெயரைக் கண்டெடுப்பது

அரிதாக இருக்கிறது"

என்னும் புள்ளி விபரக் கணக்கையும் அயோத்திதாசப் பண்டிதர் கண்டுபிடித்துள்ளார் (Manokari, 2005). இதற்குக் காரணம் நமது தேசத்தில் சுயநலம் கருதும் மக்கள் ஏற்படுத்தியுள்ள சட்டமே என்றும் இரவு பகலாக நிலத்தில் கூலி வேலை செய்த ஏழைக்கு சாதி பேதக்காரர்கள் தந்த கூலி நாள் ஒன்றுக்கு ஒன்பது காசு ஆகும். இவ்வாறு தலித் மக்களின் உழைப்பைச் சுரண்டிய விதத்தினை அயோத்திதாசப் பண்டிதர் கூறியுள்ளார்.

## பிராமணர்கள் சட்டம்

பிராமணர்கள் இந்தியாவின் நிலங்களைக் கைப்பற்றிய பிறகு அவர்கள் தலித் மக்களுக்கு செய்த கொடுமைகள் மிகவும் அதிகம். பொதுவிதியாக பார்ப்பனர்கள் கிராமத்தில் உள்ள பறையர்களுக்கு விதித்த சாதித்தடைகளை, அயோத்திதாப் பண்டிதர் அவர்கள் தனது தமிழன் இதழில் 07.01.1909ல்

வெளியிட்டார். மதுராந்தம் தாலுகா ஓரத்தூர் கிராமத்தில் இருந்த பார்ப்பனர்கள் அக்கிராமத்து மக்களுக்கு விதித்த சாதித் தடைகளைப் பற்றி அயோத்திதாசப் பண்டிதர் பட்டியலிடுகிறார். அவை

1. பார்ப்பனர்களின் பட்டா பூமியின் வழியாகப் போகக் கூடாது.
2. பார்ப்பனர்களின் ஏரியில் தண்ணீர் மொள்ளக் கூடாது
3. தடையை மீறி தண்ணீர் மொள்ளுபவர்களின் குடங்கள் உடைக்கப்படும்.
4. பறையர்கள் படிக்கக் கூடாது.
5. மேல்காட்டில் மாடுகளையும், ஆடுகளையும் மேய்க்கக் கூடாது.
6. ஆடைகள் சுத்தமாகக் கட்டக்கூடாது.
7. மாட்டிற்குப் புல் அறுக்கக் கூடாது. சர்க்கார் தீர்வை கட்ட அக்கிரகாரத்தைச் சுற்றியே போக வேண்டும்" (Raj Gowthaman, 2006).

மேலும், "தலித் மக்களுக்கு உடைமை மறுப்பு பொதுச் சத்திரங்களில் தங்க அனுமதி மறுப்பு தாலுக்கா கோர்ட்டுக்களில் நுழையத் தடை பறையர்கள் தங்கள் கட்டும் வீடுகளில் திண்ணைகள் வைத்துக் கட்டக்கூடாது. உயர்சாதி இந்துக்களின் மாடு, குதிரைகள் வாய் வைத்து நீர் அருந்தும் குளங்களில் தலித்துகள் பாத்திரங்களில் நீர் எடுக்கக்கூடாது. இறந்துபோன ஆடு மாடுகளை மட்டுமே உண்ணலாம்" (Manokari, 2005). இதுபோன்ற பல வகையான கொடுமைகளை பார்ப்பனர்கள் கொடுத்தனர். இந்த நிலைமை இருபத்தோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், மாறவில்லை என்பதை எண்ணி அயோத்திதாசப் பண்டிதர் வருந்தினார்.

## முடிவுரை

க. அயோத்திதாசப் பண்டிதர் தன் குருவிற்கு பெருமை சேர்க்கும் விதத்தில் ஆசிரியரின் பெயரையே தன் பெயராய் அமைத்துக் கொண்டவர். அயோத்திதாசப் பண்டிதர் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை ஆங்கில அரசிடம் எடுத்துக் கூறி சமூகத்தில் சாதியக் கொடுமையினை பாதியளவு குறையச் செய்தவர். பூர்வ குடிமக்களான திராவிட மக்களை ஒடுக்கும் காரணிகளில் ஒன்றான இந்து மதக் கொள்கையை எதிர்த்தவர். மதிக்கப்படாமல் இருந்த திராவிட மக்களுக்குத் தேர்தலில் நிற்கின்ற உரிமையையும் வாக்களிக்கும் உரிமையையும் பெற்றுத்தந்தவர். அதுமட்டுமல்லாமல் திராவிடக் குடிமக்களுக்கும் கல்வி வழங்கவும் அரசுப் பணியில் சேர்வதற்குக் பல வழிகளைக் கண்டறிந்தவர். சமயங்கள் கொண்டுள்ள பல மூட நம்பிக்கைகளை கூர்மையாக எடுத்துக் காட்டியவர். அயோத்திதாசப் பண்டிதர் நாட்டின் மீதும் தமிழ் மக்களின் மீதும் அக்கறை கொண்டவர். சமூகம், மொழி, இலக்கியம், சாதியம், சமயம் போன்றவற்றில் தன் கருத்துகளை விளக்கி மக்களை நல்வழிப் படுத்துவதே அயோத்திதாசப் பண்டிதரின் எண்ணமாக இருந்தது என்பதை நாம் இதன் மூலம் அறியமுடிகிறது.

## References

Angayarkanni, C., Kiruthiga, K., (2020) Iyothee Thass Alternate Script, Indian Journal of Tamil, 1(1), 22-26. Https://Doi.Org/10.34256/Ijot2012

Angayarkanni, C., Kiruthiga, K., (2021) Caste and Dynamics of Iyothee Thass, International Research Journal of Tamil, 3(S-1), 290-295. Https://Doi.Org/10.34256/Irjt21s147

Ayothithasar, (1999) Ayothithasar Panditharin Sinthanaikal, Babasaheb Ambedkar Kalai Ilakkiya Sangam, Chennai, India.

Dharmaraj, T., (2003) Naan Oru Buddhan, Dr. Ambedkar Panpattu Maiyam, Madurai, India.

Dhatchanamoorthi, A., (2005) Thamizhar Nakarigamum Panpaadum, Ainthinai Pathippagam, Chennai, India.

Kanniappan, M., (2013) Vethankal Thantha Vethanaikal Eruthi Echasarikai, Uma Pathippagam, Chennai, India.

Manokari, N., (2005) Ayothithasar Ennum Mamanithar, Arul Pathippagam, Chennai, India.

Narayanasamy, S., (2006) Sivraththiri Purananam, Sagunthathalai Nilaiyam, Chennai, India.

Prabagaran, V., (2005) Oru Paisa Tamilan Ayothithasar Pandithar, Thiruvalluvar Library, Chennai, India.

Raj Gowthaman, (2006) Ka. Ayothithasar Aaivugal, Tamil Samoogamum, Tamizhini, Chennai, India.

Subasu, (2005) Seerthiruththa Semmalgal, Kumaran Pathippagam, Chennai, India.

Thangavelu, K., (1993) Tamil Desiya Unarvin Munnodi Tamilan Ayyodhidasai Pandithar, Nalini Pathippagam, Chennai, India.

Vengadasamy Mayilai, S., (1962), Bouthamum Tamilum, Naam Tamilar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License